

# அமரர் புலமைச்சிகரம்
# வே.அன்பழகன் ஞாபகார்த்தமாக
## lvinstamil.com செய்தி இணையத்தளம் நடாத்தும்
## தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும் வழிகாட்டல் கருத்தரங்கும்- 2022 [முற்றிலும் இலவசமானது]


**ஆசிரியர் திரு. சண் சுதர்சன்**

**(யாழ்- மலையகம்)**


சுட்டெண் : ---------------------------------------------------------------------

## வினாத்தாள் II

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- ❖ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- ❖ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன.
- ❖ ஒவ்வொருவினாவிலும் மூன்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.
- ❖ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| **இறுதிப்புள்ளிகள்** | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| **முதலாவதுபரீட்சகர்**<br>புள்ளிவழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்று படுத்துகின்றேன். | <br>**V/II/T/** |
| **இரண்டாவதுபரீட்சகர்**<br>முதலாவதுபரிசீலணையின் மதிப்பீடுசரியானதெனச் சான்றுபகிர்கின்றேன். | <br>**V/II/T/** |
| **கணிதபரீட்சகர்**<br>மதிப்பீடுவழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளிசரியானதென தெரிவிக்கின்றேன் | <br>**V/II/T/EMF/** |
| **பிரதமபரீட்சகர்**<br>மேற்பார்வைசெய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | <br>**V/II/T/CH/** |

**(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

மின்குமிழைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே எடிசனின் புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. எடிசன் பல பொருட்களைக் கண்டு பிடித்தாலும் அவர் கண்டுபிடித்த மின்குமிழே அவருடைய அழியாப் புகழுக்குக்காரணமாயிற்று. விடாமுயற்சியினாலும், ஊக்கத்தினாலும் எடிசன் உயர்ந்த நிலையை அடைந்தான். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இவரது வரலாறு தக்க சான்றாக அமைகின்றது.

*01.* உலகெங்கும் என்ற சொல்லை பிரித்தெழுதுக.?..................................................................................

*02.* பந்தியில் இடம்பெற்றுள்ள பழமொழியை எழுதுக?.....................................................................

*03.* எடிசன் உயர்ந்த நிலையை அடைவதற்கு காரணமாக இருந்த ஒரு விடயத்தை குறிப்பிடுக?

........................................................................................................................................................................

*04.* எடிசன் கண்டுபிடித்த புகழுக்குரிய பொருள் எது? ...............................................................................

*05.* தாழ்ந்த என்ற சொல்லின் எதிர் சொல்லை எழுதுக?...............................................................................

*06.* முன்பே இச் சொல்லில் வந்துள்ள உயிர்க்குறி எது?.............................................................................

**(02) பின்வரும் பாடலில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.**

*01.* மலையில் வந்து முகில்கள் கூட
..........................................................
அழகுத்தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது

**(03) கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

*01.* மீன்கள் கோடி சூழ வெண்ணிலாவே! - ஒரு
வெள்ளி ஓடம் போல வரும் வெண்ணிலாவே!
பாடலில் இடம் பெற்றுள்ள உவமானத்தை எழுதுக?.............................................................................

**(04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை இனங்கண்டு அதன்கீழ்க்கோடிடுக.**

*01.* பெரியோர் கூறும் அறிவுரைகளை எடுத்தெறிதல் கூடாது இதில் எடுத்தெறிதல் என்பது.................
( ஆமோதித்தல் , அலட்சியம் செய்தல்)

*02.* ஆசிரியர் தரும் வேலைகளை கடன் கழித்தது போல் செய்வது கூடாது. கடன் கழித்தல் என்பது.............................. ( மனமின்றிச்செய்தல் , கோபத்துடன் செய்தல் )

**(05) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

*01.* அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் ...........................................................................

*02.* உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.......................................................................................

**(06) பின்வரும் கூற்றுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

*01.* உனது நண்பனின் பெயர் என்ன

**(07) சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லை தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

*01.* முற்பது , முப்பது

*02.* பணியாற்கள் , பணியாட்கள்

**(08) தனிச்சொல்லை எழுதுக.**

*01.* சுதந்திரமற்று வாழ்பவன் ...............................................

**(09)** *01.* உயிர் மெய் எழுத்தக்கள் எத்தனை? ....................................................

*02.* கரவை வேலன் கோவை நூலை எழுதியவர்? ......................................................

**(10) பின்வரும் வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

*01.* வானளாவிய கட்டடம் கொழும்பு நகரை அழகுபடுத்தியது.

..........................................................................................................................................................

*02.* பின்வரும் பிராணியின் இளமைப்பெயரை குறிப்பிடுக. கோழி ....................................................

**(11) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக**

*01.* Post office ........................................ *02.* Crow ....................................................

**(12) தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

*01.* I want to drink .............................. ( apple / milk )

*02.* I have ...................... eyes ( two / five )

**(13) பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் கூறப்படும் விதத்தினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

*01.* சத்தம் போட வேண்டாம் ..........................................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக**

*01.* யானை ..............................................................................................................................

**(15) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

*01.* ஒபே மித்துரா கவுத? ..............................................................................................

(16) வருடம் ஆரம்பிக்கும் போது சகல பாடசாலைகளிலும் இல்ல விளையாட்டுப்போட்டி ஆரம்பமாகி விடும். பல மாணவர்களும் தமது திறமைகளைக் காட்டுவார்கள். "எமது பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டியில் எமது இல்லமே வெற்றி பெற்றது." அதன் பின்னர் நடந்த விடயங்களை மூன்று வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்கு மேற்பட்ட சொற்களை கொண்டிருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்புகளும்,எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

01.............................................................................................................................

.............................................................................................................................

02.............................................................................................................................

.............................................................................................................................

03.............................................................................................................................

.............................................................................................................................

**கணித வினாக்களுக்கு விடை தருக.**


17. தரப்பட்ட எண்ணை எழுத்தில் எழுதுக?

60027 .............................................................................................................

18. 15 - 20 வரையுள்ள எண்ணில் இடைப்படும் இரட்டை எண்களை உரோமன் குறியீட்டில் எழுதுக? ............................................................

19. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக.

............................................................



20. 120 பழங்களைக் கொண்ட மாம்பழக் குவியலில் $\frac{3}{8}$ பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக 8 இருந்த நல்ல மாம்பழங்கள் பாமினி, சாலினி, பாத்திமா ஆகிய மூன்று நண்பிகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

(I) குவியலில் இருந்த நல்ல மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு ? ..............................

(ii) ஒரு நண்பிக்குக் கிடைத்த மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு ? ...........................


21. 1kg பருப்பின் விலை 86 ரூபாய் ஆகும். 3kg 500g பருப்பு வாங்கிய வியாபாரியிடம் 500 ரூபாய் கொடுத்தால் மீதிப்பணம் யாது?..................................................

22. 2லீற்றர் 500 மில்லிலீற்றர் குளிர்பானம் 4 குவளைகளில் சமமாக ஊற்றப்பட்டது. ஒரு குவளை கொள்ளும் குளிர்பானம் எவ்வளவு?...........................................

23. சீதாவுக்கு சட்டை ஒன்றை தைப்பதற்கு 2 மணித்தியாலம் 30 நிமிடம் செலவாகின்றது. சீதா சட்டையைத் தைக்க ஆரம்பித்த நேரம் பி.ப. 3.40 இற்கு ஆகும். அதன்படி சீதா சட்டையைத் தைத்து முடித்த நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் எழுதுக?

.......................................................... மணித்தியாலம்

24. தரப்பட்ட வரிப்படத்தை கவனத்தில் கொண்டு விடை தருக.




1) பஸ் தரிப்பிடத்தில் இருந்து பாடசாலைக்கு ஊடாக வங்கிக்குள்ள தூரத்தை கணிக்க?

............................................


2) வைத்தியசாலையில் இருந்து பஸ் தரிப்பிடத்திற்கும், வைத்தியசாலையில் இருந்து வங்கிக்கும் இடையில் எத்தனை கிலோமீற்றர் , எத்தனை மீற்றர் வித்தியாசம்?

..........................................கிலோமீற்றர் ................................ மீற்றர்

25. 6km 750g தேயிலையிலிருந்து 250g கொண்ட எத்தனை தேயிலை பைக்கற்றுக்களை தயாரிக்கலாம்? .......................................

26. 1லீற்றர் 500மில்லிலீற்றர் பழச்சாற்றின் செறிவை குறைப்பதற்கு 3l 750ml நீர் சேர்க்கப்பட்டு பானம் தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட பானத்தின் மொத்தக் கனவளவு யாது?........................................................

27.




A,B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள ஐந்து வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளன. இவ்வடிவங்களில்

(I) குறைந்த எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையப்படத்தக்க வடிவத்துக்குரிய ஆங்கில எழுத்து யாது ? ..................................................

(ii) அதிக எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையப்படத்தக்க வடிவத்துக் குரிய ஆங்கில எழுத்து யாது ?..........................................................

28. காசிம் A எனும் புள்ளியிலிருந்து 30m தூரம் வடக்கு நோக்கிச் சென்று அங்கிருந்து 20m தூரம் கிழக்கு திசைக்கு சென்று B எனும் புள்ளியை அடைந்தார் எனின் B இற்கு எத்திசையில் A உள்ளது? .......................................

29. காலையிலும், மாலையிலும் 3 வீதம் குடிப்பதற்காக வைத்தியரால் 24 மாத்திரைகள் வழங்கப்பட்டன. எனின் அம் மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப்போதுமானது?........................

30. ரூபா 27.50 வீதம் மூன்று அடிமட்டங்களை வாங்கிக் கொண்டு ரூபா 100 ஐ வழங்கும் போது கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..........................................................

**மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

31. வதிவுச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முதலில் செல்ல வேண்டியது

1) பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் 2) கிராம சேவகரிடம்

3) பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம்

32. பயிர்ச்செய்கை பற்றிய அறிவுரை வழங்கும் நிறுவனம்

1) பிரதேச சபை

2) கிராம சேவை அலுவலகம்

3) விவசாயிகள் சேவை மத்திய நிலையம்

33. பறந்து செல்லும், தேனைக் குடிக்கும், கொடுக்கால் கொட்டும் அப்பிராணி எது?

1) வண்ணத்துப்பூச்சி 2) தேனீ 3) சிட்டுக்குருவி

34. நீண்ட கழுத்தும், நீண்ட வாலும், (தோகையும்) உடைய பறவை எது?

1) கொக்கு 2) நாரை 3) மயில்

35. இலங்கை நாட்டுக்குரித்தான மீனினம் எது?

1) கோழிக்கொண்டை 2) திமிங்கிலம் 3) சுறா

36. "கொழும்பு நகரை வாழவைக்கும்
கோடி உயிரைக் காத்து நிற்கும்" இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள நதி எது?

1) மகாவலிகங்கை 2) வளவேகங்கை 3) களனிகங்கை

37. ஏழு நட்சத்திரக் கூட்டங்களைக் கொண்ட உடுக்கோலம்

1) தேள் 2) இடபம் 3) கார்த்திகை

38. வளமான மண்ணின் பண்புகளில் ஒன்று

1) சிறு கற்கள் நிறைந்திருக்கும் 2) தூசி அதிகம் கலந்திருக்கும்

3) கபில நிறத்தில் காணப்படும்

39. காற்றினால் இயங்கக் கூடிய இசைக்கருவி

1) கொம்பு 2) தபேலா 3) வீணை

40. வீடு ஒன்றுக்கு நேரடியாக வழங்கப்படும் சேவை ஒன்றல்லாதது

1) மின்சேவை 2) குடிநீர் வழங்கல் சேவை 3 ) போக்குவரத்துச் சேவை

41. தக்காளிப்பழத்திலுள்ள போசணைச்சத்து

1) விற்றமின்கள் 2) மாச்சத்துக்கள் 3) இலிப்பிட்டுகள்

42. அயடீன் குறைப்பாட்டினால் ஏற்படக்கூடிய நோய் எது?

1) வாந்திபேதி 2) என்புறுக்கி 3) கண்டமாலை

43. பழத்தின் உள்ளே கறுப்பு நிற வித்துக்கள் அதிகமாகக் காணப்படுவது

1) விரலுப்பழத்தில் 2) அப்பிள் பழத்தில்

3) பப்பாசிப்பழத்தில்

44. வித்துக்களையும் சேர்த்து கறி சமைத்து உண்ணக்கூடிய காய்

1) பலா 2) வட்டுக்கத்தரி 3) வெள்ளரி

45. வின்னாரி சேர்த்து சமைத்த உணவுகளை போட்டு வைப்பதற்குப் பொருத்தமான பாத்திரம்

1) அலுமினியப்பாத்திரம் 2) மட்பாத்திரம்

3) பிளாத்திக் பாத்திரம்

46. கிணற்றிலிருந்து நீரை அள்ளுவதற்கு பயன்படுவது

1) கஸ்பர்வீல் 2) கப்பி 3) திருப்புளி

47. பலகையில் குழி குடைந்து அலங்காரங்களை செய்வதற்கு தேவைப்படும் உபகரணம்

1) கத்தி 2) அரம் 3) உளி

48. கண்டிய நடனக்கலைஞனின் உருவப்படம் அச்சிடப்பட்டுள்ள தாள் காசு எது?

1) ரூபா - 100 2) ரூபா - 20 3) ரூபா - 50

49. இத்தாவரமானது



1) லீக்ஸ்

2) கற்றாளை

3) காட்டு வெங்காயம்

50. இலங்கை நாட்டுக்குரித்தான தாவரம்

1) நிலவேம்பு 2) கறிவேப்பிலை 3) வேம்பு

51. சூழலுக்கு நேயமான பூச்சிக் கொல்லித் திரவம்

1) அரிசி கழுவும் நீர் 2) தேங்காய் எண்ணெய் 3) புகையிலை நீர்

52. ஊடு தெரியக் கூடிய நீர் பாத்திரத்தில் ஒரு பொருளை போட்டு பார்க்கும் போது அப்பொருள் எமது கண்ணுக்குத் தெரிவது?

1) மிகவும் பெரிதாக 2) மிகவும் சிறிதாக

3) அதே அளவாக

53. மணலின் கீழ் வைப்பதன் மூலம் நெடுங்காலத்திற்கு பேணத்தக்க உணவு வகைகளுக்கு உதாரணம்

1) எலுமிச்சம்பழம் , பலாக்கொட்டை, இஞ்சி 2) மஞ்சள், மாம்பழம், கிழங்கு

3) வெங்காயம், ஈரப்பலா, தேங்காய்

54. இலங்கை அரசாங்க இலட்சினையில் உள்ள சூரியன், சந்திரன் என்பவற்றால் குறிப்பிடப்படுவது

1) சௌபாக்கியம் 2) தன்னிறைவு 3) நிலைத்திருத்தல்

55. நாய்கடித்த போது உடனடியாக அளிக்கப்படும் முதல்உதவி யாது?

1) காயத்தை மூடிக்கட்டுதல்

2) காயத்தின் மேல் எண்ணெய் படையொன்றை பூசுதல்

3) கடித்த இடத்தைச் சவர்க்காரத்தினாலும், தண்ணீரினாலும் கழுவுதல்.

56. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலைவகையாக அமைவது

1) கோப்பை இலை 2) அகத்தி இலை 3) அவரை இலை

57. திசாவாவியை கட்டிய மன்னன்

1) தேவநம்பியதீஸன் 2) பண்டுகாபயன் 3) மகாசேனன்

58. இலங்கையின் தேசப்படத்தில் குறித்த பிரதேசத்தை நீலநிறத்தினால் அடையாளப்படுத்திக் காட்டப்படுவது

1) நீர்வீழ்ச்சி 2) ஆறுகள் 3) குளம்

59. களனி கங்கை, களுகங்கை ஆகிய நதிகள் போய்சேரும் கடலுக்கு அருகில் உள்ள இரு நகரங்களும் அமைந்துள்ள மாகாணம் எது?

1) வடமேல் மாகாணம் 2) மேல்மாகாணம் 3) தென்மாகாணம்

60. காந்தத்துண்டை நோக்கிக் கவரப்படும் பொருள் சோடி

1) பித்தளையும், அலுமினியமும்

2) இரும்பும், அலுமினியமும்

3) இரும்பும், உருக்கும்.



Tamil WE REPORT TO YOU.